குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.
முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,
நீதித்துறை நடுவர், சீர்காழி.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.13/2016
CNR.NO.TNMY08-000116-2016

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் : | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>சீர்காழி காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்,<br>குற்ற எண். 07/2014 |
| /எதிராக/ | |
| குற்றம்சாட்டப்பட்டவர்: | 1. ரவி, 57/2014, த/பெ. ராமசாமி, வ.உ.சி. தெரு, தென்பாதி, சீர்காழி.(Splitted as CC.No.236/2023)<br>2. குருமூர்த்தி 34/2014 த/பெ. லெட்சுமணன், பெரம்பட்டு, வல்லம்படுகை |
| குற்றச்சாட்டு | இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 457,380 |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 04.05.2013 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 05.05.2013 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 2ம் எதிரி 22.12.2015 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 2ம் எதிரி 25.01.2016 |
| கு.வி.மு.ச.பிரிவு 240-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | 22.12.2023 |
| விசாரணை தொடங்கிய நாள் | 29.01.2024 |
| விசாரணை முடிவடைந்த நாள் | 30.03.2026 |
| BNSS 359-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | -- |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | 29.01.2024 | 27.02.2024 |
| அரசு தரப்பு சாட்சி.2 | 29.01.2024 | 27.02.2024 |
| அரசு தரப்பு சாட்சி.3 | 07.01.2025 | 07.01.2025 |
| அரசு தரப்பு சாட்சி.4 | 18.06.2025 | 18.06.2025 |
| அரசு தரப்பு சாட்சி.5 | 19.06.2025 | 19.06.2025 |
| அரசு தரப்பு சாட்சி.6 | 10.09.2024 | 10.09.2024 |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 19:27:06 +0530

<table>
<tr><td></td><td><table><tr><td>அரசு தரப்பு சாட்சி.7</td><td>10.09.2024</td><td>10.09.2024</td></tr><tr><td>அரசு தரப்பு சாட்சி.8</td><td>25.02.2026</td><td>25.02.2026</td></tr></table></td></tr>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>17.03.2026</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விபரம்</td><td>இல்லை</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம்</td><td>இல்லை</td></tr>
<tr><td>வழக்கு விசாரணையில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம்</td><td>போலிசார் எதிரிகளுக்கு எதிரான பிடியாணையை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது.</td></tr>
<tr><td>தீர்மானம்</td><td>எதிரி இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457,380 ன் கீழ் குற்றவாளி என தீர்மானம்.</td></tr>
<tr><td>முடிவு</td><td>எதிரி ரவிக்கு எதிராக வழக்கு பிரித்தெடுக்கப்பட்டுவிட்டதால் அவர் குறித்து தீர்ப்பளிக்கப்படவில்லை. முடிவாக, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக எதிரி குருமூர்த்தி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457,380ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
</table>

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 25.04.2016 தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 30.03.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, குற்ற முறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. பாலாஜி அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று நீதிமன்றம் வழங்கிடும்

## <u>தீர்ப்புரை</u>

1. இவ்வழக்கானது, சீர்காழி தென்பாதியில் உள்ள NSP நகரில் அமைந்துள்ள புகார்தாரரும் சாட்சி–1ம் ஆன தமிழரசி என்பவரின் பூட்டப்பட்ட வீட்டில் திருடவேண்டும் என்ற நோக்கத்தோடு, கடந்த 04.05.2013ம் தேதி இரவு அந்த வீட்டுக் கதவின் பூட்டை எதிரிகள்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 19:27:14 +0530

உடைத்து வீட்டின் உள்ளே சென்று அங்கு பீரோவிலும் லாக்கரிலும் வைக்கப்பட்டிருந்த ரூபாய் 8,00,000/- மதிப்புடைய தங்க நகைகள் மற்றும் ரொக்கப் பணத்தை திருடிச் சென்றது சம்பந்தமாக, மேற்படி எதிரிகளின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457, 380ன் கீழ் தண்டிக்கத்தக்கது என்று கருதி சீர்காழி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 173(2)ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்கு ஆகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 06.04.2016 ஆம் தேதி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு 2ம் எதிரி குருமூர்த்தி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அவருக்கு கடந்த 18.12.2023 ஆம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 207-ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. 1ம் எதிரிக்கு சார்வு செய்யப்படாமல் அழைப்பாணை நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்ததால் அவருக்கு எதிராக இவ்வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு தனி வழக்கு எண்ணான சி.சி.எண்.236/2023 வழங்கப்பட்டது. எதிரி குருமூர்த்திக்கு எதிராக மட்டுமே இவ்வழக்கு முன்னெடுக்கப்பட்டதால் இந்த தீர்ப்பு அவரை மட்டுமே கட்டுப்படுத்தும். பின்னர் கடந்த 22.12.2023ஆம் தேதி இந்திய தண்டனை சட்டம் பிரிவு 392ன் கீழ் எதிரி குருமூர்த்திக்கு எதிராக குற்றச்சாட்டு வனைந்து, குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரியிடம் விளக்கி கேட்கப்பட்டது. அதற்கு எதிரி 'பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும்' கூறினார்.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.1 முதல் 8 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 11 குறியீடு செய்யப்பட்டது. பட்டியல் சாட்சிகள் 3,4,6,10 முதல் 14 ஆகியோர்களை உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

4. இவ்வழக்கில் கடந்த 17.03.2026ம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து, அவற்றை கேள்விகளாக தொகுத்து குற்ற விசாரணை முறை சட்டம் 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, அதனை மறுத்து எதிரி 'பொய் சாட்சி, பொய் வழக்கு' என்றும், தனது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சி இல்லை என்றும் கூறினார். ஆகவே, எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 19:27:26 +0530

5. அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 11 ஆவணங்கள் வாயிலாகவும், அரசு தரப்பு வழக்கை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

6. இவ்வழக்கின் குற்ற சம்பவத்தை கண்ணுற்ற நேரடி சாட்சிகள் யாரும் இல்லை என்றும், கைப்பற்றுதல் மகசர் சாட்சி பிறழ்சாட்சி ஆகிவிட்டநிலையில், காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தையும், கேள்விநிலை சாட்சிகளின் சாட்சியத்தையும் வைத்து எதிரி குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது என்றும், எனவே, எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரியை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமாறும் வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனைகள்

i) இவ்வழக்கில் எதிரிகள் மீதான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 457,380ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**8.தீர்வு:-**

8.1) அரசு தரப்பு வழக்கு எவ்வாறு அமைந்துள்ளது மற்றும் இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, இவ்வழக்கின் புகார்தாரர் தமிழரசி என்பவர் தனது இரண்டு மகள்களோடு கதவு எண். 1/14 NSP நகர், தென்பாதி, சீர்காழி என்னும் முகவரியில் வசித்து வருகிறார். அவரது கணவர் சிங்கப்பூரில் பணியாற்றி வந்தார். இந்நிலையில், 04.05.2013ம் தேதி காலை 11.00 மணியளவில் தனது அண்ணன் குமார் என்பவரை தனது வீட்டிற்கு வரச் சொல்லி மேற்படி வீட்டை பார்த்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு புகார்தாரர் அவரது மாமனார் ஊரான கொள்ளிடம் பகுதியில் அமைந்த குத்தகக்கரைக்கு சென்றுவிட்டார். அன்றைய தினம் இரவு மேற்படி குமார் அந்த வீட்டில் லைட்டை ஆன் செய்துள்ளார். மறுநாள் காலை 6.30 மணியளவில் குமார் லைட்டை ஆப் செய்வதற்காக அந்த வீட்டிற்கு வந்தபோது, வீட்டு வாசல் கதவுகளின் பூட்டுகள் உடைக்கப்பட்டு வீடு திறந்த நிலையில் இருந்ததை கண்டு அதிர்ந்து புகார்தாரருக்கு தகவல் கொடுத்துள்ளார். பின்பு புகார்தாரர் அந்த வீட்டிற்குள் சென்று பார்த்து, லாக்கரில் இருந்த தங்க நகைகள், வாட்ச், ரொக்கப்பணம் உள்ளிட்ட ரூ.8,00,000/- மதிப்புள்ள பொருட்கள் களவாடப்பட்டிருப்பதை அறிந்தார். அன்றைய தினமே மேற்படி திருட்டு சம்பவம் குறித்து



KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.03.30 19:27:33 +0530

சீர்காழி காவல் நிலையத்தில் அவர் புகார் கொடுத்து அதன்பேரில் அடையாளம் தெரியாத நபர்களுக்கு எதிராக போலிசார் இ.த.ச பிரிவுகள் 457, 380ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள். மேற்படி வழக்கு புலன் விசாரணையில் இருந்து வந்த நிலையில், சம்பவம் நடந்து 6 மாதங்கள் கழித்து கடந்த 16.11.2013ம் தேதி பகல் 12.15 மணிக்கு திருமுல்லைவாசல் பகுதியில் சந்தேகப்படும்படியாக நின்றுகொண்டிருந்த எதிரி ரவியை பிடித்து விசாரித்துள்ளார்கள். அப்போது எதிரி ரவி எந்தவித தூண்டுதலுமின்றி தாமாக முன்வந்து இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் தானும் எதிரி குருமூர்த்தியும் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளார். எதிரி ரவி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், அவர் மறைத்து வைத்திருந்த திருட்டு பொருட்களுள் சிலவற்றை போலிசார் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார்கள். பிறகு எதிரி குருமூர்த்தியும் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டு, போலிசார் புலன்விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 457, 380ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அரசு தரப்பு வழக்கு இவ்வாறு அமைந்துள்ளது. இந்நீதிமன்றத்தால் எதிரி குருமூர்த்திக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 457,380-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

8.2) **அரசு தரப்பு சாட்சி 1ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் இவ்வழக்கின் புகார்தாரர் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 04.05.2013 அன்று காலை 11.00 மணிக்கு தனது அண்ணனை வீட்டை பார்த்து கொள்ள சொல்லிவிட்டு ஊருக்கு சென்றதாகவும், அன்றைய தினம் இரவு தன் அண்ணன் லைட் போட்டு இருந்ததை மறுநாள் காலை அணைக்க சென்றபோது வீடு திறக்கப்பட்டு இருந்ததாக தனக்கு போன் மூலம் தன் அண்ணன் தகவல் சொன்னதாகவும், தனது மகனை அழைத்துக் கொண்டு மறுநாள் காலை 8.30 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்த போது வீட்டில் இருந்த பீரோ உடைக்கப்பட்டு 100 பவுனுக்கு மேலே நகை காணாமல் போயிருந்தது என்றும், அந்த நேரத்தில் இருந்த பதற்றத்தில் 86 பவுன் நகையும் பணம் ரூ.1,40,000/- திருடு போயிருந்ததாக புகார் கொடுத்திருந்ததாகவும், ஓம் என்று செயின் 9 பவுன், அரை பவுன் மோதிரம் 4, பவுன் கலந்த கைக்கடிகாரம் 2, 2.5 பவுன் செயின் 1, ஆரம் 8 பவுன், நெக்லஸ் 4 பவுன், காசு மாலை 10 பவுன், 1 பவுன் மோதிரம் 3, பிரேஸ்லட் 3 பவுன், பிரேஸ்லட் 2 பவுன், தங்கக் கொலுசு 6 பவுன், வளையல் 2 பவுன் வீதம் 8 வளையல், கல்தோடு 1 பவுன் வீதம் 2 செட், தோடு ஜிமிக்கி 1 பவுன், மாட்டல் 1 பவுன், இரட்டை வட செயின் 5 பவுன், சலங்கை தோடு 2 செட் 2 பவுன், குழந்தை செயின் 6 செயின் தலா 2 பவுன் வீதம் 12 பவுன், குழந்தை வளையல் 3 பவுன், மேலும் சிறு சிறு நகைகள் காணாமல் போயிருந்ததாகவும், நீதிமன்றத்தில் மனு செய்து 15 பவுன்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 19:27:39 +0530

நகைகளை மட்டுமே தான் திரும்பப் பெற்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக அவரது புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர் தனது குறுக்கு விசாரணையில் தான் வீட்டிற்கு சென்று பார்த்த போது கதவும் பூட்டும் உடைக்கப்பட்டு இருந்தது என்றும், எதிரியை தான் இது வரை பார்த்ததில்லை என்றும், போலிசார் தன்னிடம் எதிரியை அடையாளம் காட்டவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8.3) **அரசு தரப்பு சாட்சி.2ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் புகார்தாரரின் அண்ணன் என்பதும், திருட்டு சம்பவம் பற்றி முதலில் அறிந்தவர் என்பதும் தெரியவருகிறது. அவர் தனது முதல் விசாரணையில் தனக்கு எதிரி ரவியை தெரியும் என்றும், எதிரி குருமூர்த்தியை தெரியாது என்றும், காவல் அதிகாரி அவரிடம் மேற்படி இருவர் தான் திருடியதாக கூறியதாகவும், கடந்த 04.05.2013 அன்று காலை 11.00 மணிக்கு அசா.1 தன்னிடம் வீட்டை பார்த்து கொள்ள சொல்லிவிட்டு ஊருக்கு சென்று விட்டதாகவும், அன்றைய தினம் இரவு லைட் போட்டு இருந்ததை மறுநாள் காலை தான் அணைக்க சென்றபோது, வீடு திறக்கப்பட்டு இருந்தது தெரிய வந்து போன் மூலம் அசா.1க்கு தகவல் சொன்னதாகவும், அதன் பிறகு மேற்படி வீட்டிலிருந்து 86 பவுன் நகையும் பணம் 1 லட்சத்துக்கு மேல் திருடு போயிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அது குறித்து புகார் அளிக்கப்பட்டதாகவும், போலிசார் தன்னை விசாரித்ததாகவும், சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில் வீட்டின் கதவும் தாழ்ப்பாளும் உடைக்கப்பட்டிருந்ததாகவும், திருட்டை எதிரி தான் செய்திருக்க வேண்டும் என தான் சந்தேகப்படுவதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

8.4) **அரசு தரப்பு சாட்சி 3ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் பார்வை மகசர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில் இவ்வழக்கு திருட்டு சம்பவம் பற்றி அசா.2 தனக்கு போன் மூலம் தகவல் சொன்னதாகவும், தான் திருட்டு நடந்த வீட்டிற்கு சென்ற போது அங்கு போலிசார் விசாரித்துக் கொண்டிருந்ததாகவும், பார்வை மகசரில் உள்ள கையெழுத்தை தான் காவல்நிலையத்தில் வைத்து போட்டதாகவும், அதில் திருடுபோனது சம்மந்தமாக எழுதப்பட்டிருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக பார்வை மகசரில் உள்ள அவரது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8.5) **அரசு தரப்பு சாட்சி 4ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரும் பார்வை மகசர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில் கடந்த 5.5.2013 ஆம் தேதி பகல் 3.30 மணியளவில் திருடு போனது தொடர்பாக சீர்காழி போலிசார் தன்னிடம் விசாரணை செய்து அசா.1ன் வீட்டில்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 19:27:45 +0530

வைத்து கையெழுத்து வாங்கியதாகவும், அதில் உள்ள விபரத்தை தான் படித்துப் பார்த்ததாகவும் தற்போது அது நினைவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக பார்வை மகசரில் உள்ள அவரது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8.6) **அரசு தரப்பு சாட்சி 5ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் கேள்விநிலை சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது தெரிய வருகிறது அவர் தனது முதல் விசாரணையில் கடந்த 04.05.2013 ந்தேதி அசா.1 ஊருக்கு சென்றிருந்த விபரம் தனக்கு தெரியும் என்றும், மறுநாள் காலை அசா.1 அவரது வீட்டிற்கு வந்து பார்த்து சத்தமாக அழுது கூச்சலிட்டு கொண்டிருந்ததாகவும், தான் சென்று பார்த்த போது வீடு உடைந்து கிடந்தது என்றும், வீட்டில் இருந்த பணம் நகை அனைத்தும் திருடு போயிருந்ததாக தன்னிடம் கூறினார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8.7) **அரசு தரப்பு சாட்சி 6,7ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர்கள் இருவரும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளாக அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அவர்கள் தங்களது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்று சொல்லி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்துக்களை மறுத்து , போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்று சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார்கள்.

8.8) **அரசு தரப்பு சாட்சி 8ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பாக சாட்சியமளித்த சீர்காழி காவல்நிலையத்தின் தற்போதைய ஆய்வாளர் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 05.05.2013ம் தேதி பகல் 15.00 மணிக்கு சீர்காழி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் சித்தார்த்தன் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று சீர்காழி காவல் நிலைய குற்ற எண் 203/2013ல் இ.த.ச. பிரிவுகள் 457, 380ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தது பற்றியும், உதவி ஆய்வாளர் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 05.05.2013ம் தேதி 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1–8 வரையிலான நபர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது



KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.03.30 19:27:50 +0530

பற்றியும், கடந்த 16.11.2013ம் தேதி பகல் 12.15 மணிக்கு திருமுல்லைவாசல் மாரியம்மன்கோவில் பேருந்து நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்த எதிரி ரவியை விசாரணை செய்ததில் அவர் எந்தவித தூண்டுதலுமின்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தது பற்றியும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ரவி மறைத்து வைத்திருந்த வழக்கு பொருளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியது பற்றியும், கைது செய்யப்பட்ட எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தது பற்றியும், கைப்பற்றப்பட்ட வழக்கு பொருட்களை சி.பி.எண்26/2014, 27/2014 படிவம்'95ன் மூலம் நீதிமன்ற வசம் ஒப்படைத்தது பற்றியும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 2வது எதிரி குருமூர்த்தியை இந்த வழக்கில் கைது செய்து நீதிமன்ற வசம் ஒப்படைத்தது பற்றியும், பட்டியல் சாட்சிகள் 1–9 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், இறுதியாக விசாரணை முடித்து ஆய்வாளர் கடந்த 15.03.2015ம் தேதி எதிரிகளுக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 457, 380ன் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிகள், கைப்பற்றுதல் மகசர், படிவம்'95 ஆகியவை முறையே அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. மேற்படி சாட்சியங்கள் மற்றும் இவ்வழக்கின் சூழ்நிலைகள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு, எதிரிக்கு எதிரான **இ.த.ச. பிரிவு 457**ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என பரிசீலிக்கும்போது, மேற்படி சட்டப்பிரிவானது சிறைத்தண்டனைக்குரிய குற்றம் எதையேனும் செய்வதன் பொருட்டு, இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதலை அல்லது இரவில் கன்னமிடுதலை தண்டனைக்குரிய குற்றமாக கருதுகிறது. அதேபோல, **இ.த.ச. பிரிவு 380** சட்டப்பிரிவானது மக்கள் குடியிருப்பாக பயன்படுத்தக்கூடிய கட்டிடத்தில் திருடுவதை தண்டனைக்குரிய குற்றமாக கருதுகிறது. இவ்வழக்கின் பொருண்மைகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் முதலாவதாக எவருடைய இருப்பிடத்திற்குள்ளேனும் இரவு நேரத்தில் பதுங்கி நுழையும் அல்லது கன்னமிடும் செயல் மற்றும் திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது, அ.சா.1 அளித்த புகார்(அ.சா.ஆ.1) மற்றும் அதைத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ.4) உள்ளிட்ட சான்றாவணங்களையும், அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் வாய்மொழி சாட்சியங்களையும் வைத்துப் பார்க்கும்போது, அ.சா.1 அவரது வீட்டை பூட்டிவிட்டு வெளியூர் சென்ற நாளான 04.05.2013 அன்றைய இரவு அவரது வீட்டின் கதவை



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 19:27:58 +0530

உடைத்துக்கொண்டு, அத்துமீறி மர்ம நபர்/நபர்கள் உள்ளே நுழைந்து, வீட்டிலிருந்த நகை, வாட்ச் மற்றும் பணத்தை திருடியுள்ளனர் என்பது தெரியவருகிறது.

10. இரண்டாவதாக, எவரால் மேற்படி அத்து மீறல் மற்றும் திருட்டு மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றி ஆராயும்போது, அந்த அத்துமீறல் மற்றும் திருட்டை கண்ணுற்ற சாட்சிகள் என யாரும் இல்லை என்பது தெரிய வருகிறது. அரசு தரப்பில் எவ்வாறு எதிரி குருமூர்த்தியை மேற்படி சம்பவத்தோடு தொடர்புபடுத்துகிறார்கள் என்பதை பற்றி பார்க்கும்போது, மேற்படி சம்பவம் பற்றிய புகாரினை சம்பவத்திற்கு மறுநாளான 05.05.2013 தேதியன்று பெற்ற போலிசார் அதனை விசாரித்து வந்த நிலையில், கடந்த 16.11.2013ம் தேதி 12.00 மணிக்கு திருமுல்லைவாசல் மாரியம்மன்கோயில் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த எதிரி ரவியை பிடித்து விசாரித்ததாகவும், அவர் தானும் குருமூர்த்தியும் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதன்பேரில் 1ம் எதிரி ரவியிடமிருந்து இருந்து திருட்டுப் போன இவ்வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதாகவும் அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ள நிலையில், அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6,7 ஆகியோர் மேற்படி ஆவணங்களில் உள்ள சாட்சி கையொப்பங்கள் தங்களுடையது கிடையாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் சொல்லி பிறழ் சாட்சியாகியுள்ளதை வைத்து பார்க்கும்போது, இவ்வழக்கு எதிரிகளுக்கு எதிராக ஜோடிக்கப்பட்ட வழக்காக இருக்கலாம் என்கிற நியாயமான சந்தேகம் எழுகிறது. அதேபோல, திருட்டு பொருட்கள் எதுவும் எதிரி குருமூர்த்தியின் உடைமையில் இருந்து கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பு வழக்கு அமையவில்லை. மேற்சொன்ன வகையில், அரசு தரப்பு வழக்கில் இத்தனை குறைகள் காணப்படும் நிலையில், எதிரிக்கும் குற்ற சம்பவத்திற்குமான தொடர்பு நிரூபணம் செய்யப்படாத நிலையில், விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி தான் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட அ.சா.1ன் வீட்டில் இரவு நேரத்தில் பதுங்கி உள்ளே நுழைந்து, வீட்டின் பூட்டை உடைத்து நகை மற்றும் பணத்தை திருடினார் என முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று கருதி அரசு தரப்பு வழக்கில் அமைந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பது உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. முடிவாக, எதிரி ரவிக்கு எதிராக வழக்கு பிரித்தெடுக்கப்பட்டுவிட்டதால் அவர் குறித்து தீர்ப்பளிக்கப்படவில்லை. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக எதிரி குருமூர்த்தி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 19:28:04 +0530

457,380ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12. இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வழக்கான CC.No.236/2023 நிலுவையில் இருப்பதால் வழக்கு சொத்தான C.P.No.26/2014, 27/2014ல் நகைகளை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 19:28:08 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

1. அரசுத் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திரு. தமிழரசி | புகார்தாரர் |
| அரசு தரப்பு சாட்சி.2 | திரு. குமார் | கேள்விநிலை சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.3 | திரு. கருணாநிதி | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.4 | திரு. ராமகிருஷ்ணன் | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.5 | திரு. செந்தில்வைரவன் | கேள்விநிலை சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.6 | திரு. கபிலன் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.7 | திரு. பிரதீப்ராஜ் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.8 | திரு. கமல்ராஜ் | தற்போதைய உதவி ஆய்வாளர் |

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–1/ அரசு தரப்பு சாட்சி.1 | 05.05.2013 | புகார் மனு |
| அரசு தரப்பு சான்றாவணம்–2/ அரசு தரப்பு சாட்சி.4 | 05.05.2013 | பார்வை மகசரில் உள்ள கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–3/ அரசு தரப்பு சாட்சி.5 | 05.05.2013 | பார்வை மகசரில் உள்ள கையொப்பம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–4/ அரசு தரப்பு சாட்சி.5 | 05.05.2013 | முதல் தகவல் அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்–5/ அரசு தரப்பு சாட்சி.5 | 05.05.2013 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–6/ அரசு தரப்பு சாட்சி.8 | 05.05.2013 | மாதிரி வரைபடம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–7/ அரசு தரப்பு சாட்சி. 8 | 16.11.2013 | ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட்ட பகுதிகள் |
| அரசு தரப்பு சான்றாவணம்–8/ அரசு தரப்பு சாட்சி. 8 | 16.11.2013 | கைப்பற்றுதல் மகசர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–9/ அரசு தரப்பு சாட்சி. 8 | 16.11.2013 | கைப்பற்றுதல் மகசர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–10/ அரசு தரப்பு சாட்சி. 8 | 16.11.2013 | படிவம்'95 |
| அரசு தரப்பு சான்றாவணம்–11/ அரசு தரப்பு சாட்சி. 8 | 16.11.2013 | படிவம்'95 |

3. அரசு தரப்பு சான்று பொருட்கள்: C.P.No.26/2014, 27/2014ல் தாக்கல் செய்யப்பட்ட நகைகள்
4. எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :இல்லை

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 19:28:15 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

குறிப்பு

1.தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2.இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்து வருகின்றார்.

3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

நகல்

1)மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.